**சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் நிர்வாக உட்கட்டமைப்பின் வலுப்படுத்தலிற்கான நிகழ்ச்சித்திட்டம் - 2014**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் நிர்வாக உட்கட்டமைப்பின் வலுப்படுத்தலிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) அரபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைற் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2005 நவம்பர் 11 ஆம் திகதிய 711 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் நிர்வாக உட்கட்டமைப்பின் வலுப்படுத்தலிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன: நான்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஐந்து உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனங்கள், இரண்டு பல்கலைக்கழகங்களில் இரண்டு விடுதிகள் மற்றும் இரண்டு பல்கலைக்கழகங்களில் இரண்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் என்பவற்றினை நிர்மாணித்து அவற்றிற்கு உபகரணங்களை வழங்குவதாகும்.

பின்னர், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் இரண்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மிகுதி நிதிகளை பயன்படுத்துவதற்கு, 2010 நவம்பர் 11 இல் குவைற் நிதியத்தால் அனுமதி வழங்கப்பட்டது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,400 மில்லியனிற்கு சமமான குவைற் டினார் 5.51 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,750 மில்லியனிற்கு சமமான குவைற் டினார் 4.02 மில்லியன் அல்லது 76.08 சதவீதம் அரபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைற் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2005 செப்தெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 யூன் 15 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி 2014 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய் வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | குலைற் டினர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | குலைற் டினர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| குவைற் நிதியம் | 4.02 | 1,750 | 62 | 62.00 | 4.02 | 1,804.0 |
| இலங்கை அரசாங்கம் | 1.49 | 650 | 78 | 65.11 | - | 417.5 |
| | 5.51 | 2,400 | 140 | 127.11 | 4.02 | 2,221.5 |

2007 முதல் 2010 வரையான காலத்தின் போது 14 சந்தர்ப்பங்களில் கடனளிக்கும் முகவருக்கு செய்யப்பட்ட ரூபா 187,473,743 பெறுமதியான மீளளிப்பு கோரிக்கைகள் 2014 திசெம்பர் 31 வரை நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆதலால், இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கப்பட்ட கிரயத்தினை விட மேலதிக கிரயத்தினை ஏற்கவேண்டி இருக்கும் என்பதை குறிக்கின்றது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஐந்து உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், இரண்டு பல்கலைக்கழகங்களில் இரண்டு விடுதிகள், இரண்டு பல்கலைக்கழகங்களில் இரண்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் இரண்டு கட்டிடங்கள் என்பவற்றின் கட்டிட நிர்மாண வேலைகள் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கல் என்பன 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தால் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் உரிய நிறுவனங்களிற்கு அத்தகைய சொத்துக்கள் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1,792 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான மதிப்பிடப்பட்ட நிர்மாணக் கிரயங்களிற்கு மேலாக ரூபா 1,936 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான உள்ளபடியான நிர்மாணக் கிரயம் குறிப்பிடத்தக்களவு விஞ்சியிருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் காலப்பகுதி 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியடைந்திருந்த போதிலும் நிகழ்ச்சிதிட்டத்தின் கணக்குகளை கணக்கொழிப்பு செய்வதற்கு அமுலாக்கும் முகவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.